செ.வெ.எண்: 746/2016 நாள்: 21.10.2016

# தேசிய விருது பெற்ற கைவினை கலைஞர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் சவான், இ.ஆ.ப. அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப. அவர்களை, சிறந்த கைவினை கலைஞர்களுக்கான தேசிய விருது பெற்ற (கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த) கைவினை கலைஞர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் எட்டணியைச் சேர்ந்த திருமதி. மேரி புஷ்ப ராணி, சூச்சி தையல் (Pillow Lace) செய்து வருகிறார். இவரது படைப்பு சிறந்த படைப்பாக தேர்வு செய்யப்பட்டு 2013-ஆம் ஆண்டுக்கான தேசிய விருது இந்திய குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜிபால் புதுடெல்லியில் வழங்கப்பட்டது. இவர் ஏற்கனவே மாநில விருதும், தேசியதர நற்சான்றிதழும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது சென்ற மாதம் இங்கிலாந்தில் பர்மிங் ஹாமில் நடைபெற்ற கைவினைப்பொருள்கள் திருவிழாவில் இவர் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்து கொண்டார் என்பது மேலும் சிறப்பு.

திரு. ஜெயகுருஸ் கன்னியாகுமரி மாவட்டத்தின் (Coconut Shell Jewellery) தேங்காய் ஓட்டு அணிகலன்களை உருவாக்கும் கலையில் Coconut Development Board (தேங்காய் வளர்ச்சி நிறுவனம்), இந்திய வேளாண் துறை மூலமாக தேசிய விருதினை (2015 ஆம் ஆண்டுக்கான) பெற்றுள்ளார். திரு. ஜெயகுருஸ் ஏற்கனவே தமிழ்நாடு மாநில விருதினை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. தம்புரான் அவர்கள் குமரி மாவட்டத்தின் முதுபெரும் கைவினைக் கலைஞர். தமிழக மாவட்ட கைத்திறன் விருதும் 2015-2016ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப்பொக்கி'ம் விருதும் திரு. தம்புரான் பெற்றுள்ளார் என்பது குமரிக்கே சிறப்பு.

இந்த மூன்று விருதுபெற்ற மூன்று கைவினைக் கலைஞர்கள் 18.10.16 ஆம் தேதி மாவட்ட ஆட்சியரை அவர் தம் அலுவலகத்தில் சந்தித்து குமரி மாவட்டத்தின் கலைப்பெருமையை பறைசாற்றும் விதத்தில் சந்தித்து, வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்ச்சியில் கைவினைப் பொருட்கள் அலுவலக உதவி இயக்குநர் திரு. எல்.பாலு அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.